மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

O.S. No.61/2020

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 02.04.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜ்குமார் | ஜாதி | : | |
| த/பெயர் | : | துரைராஜ் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் முதல் பாராவில் கடந்த 21.04.2005 ல் ஏற்பட்ட கிரய சாசனம் காலாவதி ஆகிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதுபோல் பிரதிவாதி வீரையன் என்பவருக்கும் எனக்கும் இடையே கடந்த 21.04.2005 ல் கிரய ஒப்பந்தம் எற்படுத்தப்பட்டது என்றால் இல்லை. தாவா சொத்திற்கு குழிக்கு 25 வீதம் 85 குழிக்கு தொகைக்கு பேசப்பட்டு கடந்த 21.04.2005 ல் கிரய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல.

தாவா சொத்து எனது தாத்தாவிற்கு சொந்தமானதாகும். எனது தாத்தா எனது பெயருக்கு கடந்த 1986 ம் வருடம் ஏற்படுத்திய உயில் ஆவணத்தில் அடிப்படையில் தாவா சொத்து எனக்கு கிடைக்கப்பெற்றது. உயில் ஆவணத்திற்கு பின்னிட்டு பிரதிவாதியிடம் கிரய ஒப்பந்தம் போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.04.02 17:27:13 +0530

District Munsif

Mannargudi.